www.manthiras.com

# ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை

## காப்பு

ஞான கணேசா சரணம் சரணம்
ஞான ஸ்கந்தா சரணம் சரணம்
ஞான ஸத்குரு சரணம் சரணம்
ஞானானந்தா சரணம் சரணம்

ஆக்கும் தொழில் ஐந்தரனாற்றநலம்
பூக்கும் நகையாள்புவனேச்வரிபால்
சேர்க்கம் நவரத்தின மாலையினைக்
காக்கும் கணநாயக வாரணமே!

மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜய ஓம் லலிதாம்விகையே
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜய ஓம் லலிதாம்விகையே

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
  கண்மூடி நெடுங்கனவான தவம்
பெற்றும் தெரியார் நிலையென்னில் அவர்
  பெருகும் பிழை என் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
  பகைவர்க்கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருபாய்
  மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

## நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
  முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம்
  குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
  நினைவற் றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரி வருவாய் வருவாய்
  மாதா ஜய ஓம் லலிதாம்விகையே

www.manthiras.com

## முத்து

முத்தே வரும்முத் தொழிலாற்றிடவே
முன்நின்றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாஸினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறுததித் கிணை வாழ்வடையேன்
மாதா ஜய ஓம் லலிதாம்விகையே

## பவளம்

அந்தி மயங்கிய வானவிதானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிறம் பவளம் பொழிவாளோ
தேம் பொழி லாமிது செய்தவளாரோ
எந்த இடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க்குருள் எண்ண மிகுத்தாள்
மந்திர வேதமயப் பொருளானாள்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

## மாணிக்கம்

காணக்கிடையா கதியானவளே
கருதக்கிடையாக் கலையானவளே
பூணக்கிடையாப் பொலிவானளே
புனையக்கடைபாப் புதுமைத்தவளே
நாணித்திரு நாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜய ஓம் லலிதாம்பியையே

## மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
ச்ருதிஜதிரயமே இசையே சரணம்
அர ஹர சிவ என்றடியவர் குழும
அவரருள் பெற அருளமுதே சரணம்
வரநவநிதியே சரணம் சரணம்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

www.manthiras.com

## கோமேதகம்

பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாப் பயனும் குன்றா வரமும்
தீமேலிடினும் ஜயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

## பதுமராகம்

ரஞ்ஜனி நந்தினி அங்கணி பதும
ராக விகாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
சாம்பவி சந்த்ர கலாதரிராணி
அஞ்ஜன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத ஸ்வரூபிணீ நித்ய கல்யாணி
மஞ்ஜீள மேரு ச்ருங்க நிவாஸினி
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

## வைடூர்யம்

வலையொத்த வினை கலையொத்த மனம்
அருளப் பறையாற்றொளியொத் தவிதால்
நிலையற் றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலையற் றசைவற் றநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே!

## நூற்பயன்

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தியெலாம் அடைவார்
சிவரத்தினமாய்த் திகழ்வாரவரே (மாதா....)